# கலைஞரும் நானும்

95

“தமிழ்ச் செம்மொழியை, கலைஞர் பயன்படுத்தியது மட்டுமல்ல, கடைக்கோடித் தமிழனும் அந்தச் செம்மொழியின் சிறப்பை உணர்ந்து பேசுகிற ஒரு வல்லமையை உருவாக்கியவர் கலைஞர்” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் எழுத்தாளர் இமையம்.



# காலண்டரில் பார்த்த கலைஞர்!

**இமையம், எழுத்தாளர்**

*1978*-ஆம் ஆண்டு இருக்கும், எங்கள் ஊரான கழுதூர் கிராமத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்டி இருந்தார், அப்போது, தி.மு.கழகத்தின் செயல்பாடுகளில் தீவிரமாக இருந்த, சென்னை, பழக்கடை ஒன்றில் கூலித் தொழிலாளியாக இருந்த அண்ணன் ஒருவர். அந்தக் கூட்டத்தில், பன்னிரண்டு, பதிமூன்று வயது சிறுவனாக கலைஞரை காலண்டரில் பார்த்தபடி அமர்ந்திருந்த சிறுவன் நான்.

‘கலைஞர் கட்சி’யில் சேர்ந்தால் நல்லது நடக்கும்’ என்று மக்கள் நம்பிக்கை வைத்த காலம். அத்தனைக்கும் அப்போது கழகம் ஆட்சியில் இல்லை, மிசா நெருக்கடிகள் எல்லாவற்றையும் தாண்டி, மக்களிடம் கழகத்தை நெருக்கமாக்கும் பணிகளிலும் இருந்தார், கலைஞர். அன்று கழகத்தின் உறுப்பினர் படிவத்தை வாங்கி, அன்பகத்துக்கு அனுப்பி வைத்தது முதல், கலைஞரின் இறுதிக் காலத்தில் அவர் பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தது வரை, எல்லாமே ஒவ்வொரு கதைகளைச் சொல்லும் அனுபவங்கள்.

### கூட்டத்தோடு கூட்டமாக...

1980-ஆம் ஆண்டில், விருத்தாசலத்தில் கலைஞர் கலந்துகொண்ட பொதுக்கூட்டம். ஊரிலிருந்து வாடகை சைக்கிளை எடுத்துக் கொண்டு சென்றிருந்தேன். அவ்வளவு பெரிய கூட்டத்தில், தூரத்தில் இருந்தே கலைஞரைப் பார்த்தேன். அதன்பின்னர், திட்டக்குடி, விருத்தாசலம் என சுற்று வட்டாரங்களில் கலைஞர் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டங்கள் என்றால் தவறாமல் சென்றுவிடுவேன்.

1987-ஆம் ஆண்டு, தேர்தல் பிரச்சாரத்தின் போது திருச்சியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு மாலை ஆறு மணிக்கே சென்று உட்கார்ந்து விட்டேன். கலைஞர் விடியற்காலை நான்கு மணிக்கு வந்தார். இப்படி கலைஞரின் ‘உயிரினும் மேலான உடன்பிறப்புகளே’ என்கிற ஒரு வார்த்தைக்காக தவமாய் தவமிருந்த கழகத்தின் தொண்டனாக இன்றும் அதே உணர்வுடன் அந்த நாட்களை நினைத்துப் பார்க்கிறேன்.

கலைஞரின் கார் கடலூர் மாவட்டத்துக்கு எப்போதெல்லாம் வருகிறதோ, அப்போதெல்லாம் அவரை வரவேற்கச் செல்லும் கார்களில் ஒன்றாக நான் செல்லும் காரும் இருக்கும். தேர்தல் பிரச்சாரம் எனில், அவர் காரின் பின்னால் அணிவகுத்துச் செல்லும் கழகக்கார னாக இருந்தேன். அண்ணா அறிவாலயத்தில் கட்சிக்காரர்களுடன் கூட்டத்துடன் கூட்ட மாகவே பார்த்திருக்கிறேன்.

### உனக்கு புத்தகம் போடுவது யார்?

2010-ஆம் ஆண்டில்தான், முதன்முதலில் தனியாகச் சந்தித்து பேசும் வாய்ப்பு அமைந்தது. அந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் ‘தமிழ்த்தென்றல்’ திரு.வி.க. விருது எனக்கு வழங்கப்படும் என அறிவிப்பு வெளியானது. அதையடுத்து, கலைஞரைச் சந்திக்க விரும்புவதாக, இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி அவர்களிடம் கேட்டிருந்தேன். அவர் தலைவரிடம் நேரம் கேட்டு, அடுத்த நாள் வரச் சொல்லி இருந்தார். நான் சென்றிருந்த நேரத்தில் திரைத்துறையினர் கூட்டம் அதிகமாக இருந்தது. காவல்துறைக் கெடுபிடிகளும் இருந்தன.

தலைவரை இன்று பார்க்க முடியாதோ என்கிற கவலை வந்துவிட்டது. இத்தனை ஆண்டு காலம் தூரத்தில் நின்று கொண்டாடிய தலைவரை முதன்முறையாக தனியாக சந்திக்கக் கிடைத்த வாய்ப்பும், எனது எழுத்துக்குக் கிடைத்த மரியாதையை தலைவரிடம் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பமுமாக இரண்டு தவிப்புடன் நின்றிருந்தேன்.

ஒருவழியாக ஒன்பது மணி வாக்கில், ஒரு காவலர் வந்து ‘இங்க எழுத்தாளர் இமையம் யாரு’ எனக் கேட்டது காதில் விழுந்தது. கட்சியின் கடைக்கோடித் தொண்டன் ஒருவன், முதன்முறையாக தன் தலைவரை, தனித்த அடையாளத்துடன் சந்திக்கும் மகிழ்ச்சியும், பதற்றமும் எனக் கலவையான உணர்வுகளில் இருந்தேன்.

எனது நூல்களை தலைவரிடம் அளித்தேன். கனிமொழி அவர்களும் என்னைப் பற்றியும், எனது நூல்களைப் பற்றியும் தலைவரிடம் எடுத்துக் கூறினார். நான் கொடுத்த நூல்களின் தலைப்புகளையும், தயாரிப்புகளையும் பார்த்தவர், ‘உனக்கு யாருய்யா புத்தகம் போடுறது?’ எனக் கேட்டார். நான் உடனே ‘க்ரியா’ என்றேன். அவர் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்து வாழ்த்துகளைக் கூறினார்.

எனக்கு எதுவும் காதில் விழவில்லை. தலைவரைச் சந்தித்த பரவசத்தில் இருந்தேன். புறப்படும் முன், தெய்வத்தைத் தொழுவதுபோல தலைவரின் காலில் விழுந்தேன். தொட்டு எழுப்பிய கலைஞர், ‘எழுத்தாளர் யாரோட காலிலும் விழக்கூடாது’ என என்னை உரிமையோடு கேட்டுக் கொண்டு அனுப்பி வைத்தார்.

### தலைவரின் அழைப்பு

அதன்பின்னர், வழக்கம்போல தலைவரின் பிறந்தநாள் விழா, கட்சிக் கூட்டங்கள் எனத் தொண்டனாகக் கலந்து கொள்வேன். பிறந்த நாள் வாழ்த்துகளில் ஏறிட்டுப் பார்த்துப் புன்னகைப்பார். 2016-ஆம் ஆண்டு கடலூரில் மகளிர் அணி நிகழ்ச்சிக்காக கனிமொழி அவர்கள் வந்திருந்தார். அவரைப் பார்க்கச் சென்ற இடத்தில், கட்சி நிர்வாகி ஒருவர் என்னைத் தரக்குறைவாகப் பேசிவிட்டார். அதைக் கவனித்த கனிமொழி அவர்கள், எனக்கு தொலைபேசி செய்து என்ன நடந்தது என விசாரித்து வருத்தம் தெரிவித்துக் கொண்டதுடன், அன்றிரவே மீண்டும் தொடர்புகொண்டு, ‘நாளை தலைவரை வந்து பார்க்கவும்’ எனத் தகவல் சொன்னார்.

‘தலைவரை வந்து பார்க்கவும்’ என்று சொன்ன நொடியில், மனதில் இருந்த வருத்தம் எல்லாம் பறந்து விட்டது. எழுத்தாளரான எனக்கு துயரம் இருக்கலாம், கட்சித் தொண்டனாக தலைவரைச் சந்திக்கும் நேரம், எல்லா அழுத்தங்களும் காணாமல் போய்விடும்தானே. அதுதான் அன்று நடந்தது. கனிமொழி அவர்களும் என்னை ஆற்றுப்படுத்தியதுடன், தலைவர் வந்ததும், ‘எழுத்தாளர் இமையம் வந்திருக்கிறார்’ என்று கூறி அறிமுகம் செய்தார். அன்று தலைவருடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் மறுநாள் கழகத்தின் ஏடான முரசொலியில் வெளியானது. தலைவர் எழுத்தின் மூலம் பல விஷயங்களை உணர்த்துவார். அல்லது ஒரு புகைப்படத்தில் சொல்வார். ஒரு சொல்லில், கண் பார்வையில், விரல் அசைவில் சொல்ல வேண்டியவற்றை கடத்தும் என் தலைவன், அன்று என்னை அடையாளப்படுத்திய விதம் என் வாழ்நாளில் மறக்கமுடியாத உயரம்.

ஒரு தொண்டன் எழுத்தாளராக இயக்கத்தில் இருப்பதும், அவனை கழகத் தலைவர் அடையாளப்படுத்துவதும் திராவிட இயக்கத்துக்கு மட்டுமே உரிய பண்பு. எழுத்துலகில் உச்சம் தொட்ட என் தலைவர் அவர் வாழ்நாளில், அந்த அடையாளத்தை எனக்கு அளித்ததும் என் வாழ்நாள் பெருமை.


**அவர் பக்கத்தில் நின்றபோதெல்லாம் எனக்கு பேச்சு எழவில்லை. ஒரு அதிசயத்தைப் பார்ப்பதுபோல பார்ப்பேன். அப்போதும் தூரத்தில் நின்று பார்த்த தொண்டனாகத்தான் பரவசத்தை உணர்ந்தேன்.**

அதுபோல, என் இரண்டாவது மகனுக்கு அடுத்த நாள் முக்கியமான அறுவை சிகிச்சை என்கிற நிலையில், அவன் தலைவரைப் பார்க்க வேண்டும் என விரும்பினான். அதற்கும் தலைவரிடமிருந்து நேரம் கிடைத்தது. அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டோம். ஆனால் ஒன்று, அவர் பக்கத்தில் நின்ற போதெல்லாம் எனக்கு பேச்சு எழவில்லை. ஒரு அதிசயத்தைப் பார்ப்பதுபோல பார்ப்பேன். அப்போதும் தூரத்தில் நின்று பார்த்த தொண்டனாகத்தான் பரவசத்தை உணர்ந்தேன். தூரத்தில் பார்த்த என் தலைவனின் கண்ணாடியும், கேட்ட கரகரத்த குரலும் என்றும் என் நினைவில் தொடரும்.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

*....பகிர்வார்கள்*

## சிந்துவெளி ஆய்வைக் கொண்டாடும் நூல்!




**சி**ந்துவெளி தொடர்பான ஆய்வறிக்கை சர் ஜான் மார்ஷல் அவர்களால் 1924-இல் வெளியிடப்பட்ட நூற்றாண்டினை சமூக அமைப்புகளும் தனிநபர்களும் பல்வேறு வகைகளில் கொண்டாடி வருகின்றனர். பள்ளி மாணவர்கள் மத்தியிலும் சிந்துவெளி ஆய்வுகள் பற்றியும் ஹரப்பா நாகரிகம் பற்றியும் புரிதல் உருவாகி வருகின்றன.

சிந்துவெளி தொடர்பான ஆய்வுகள் தொடரும் நிலையில், அண்மையில் ஆங்கிலத்தில் வெளியாகி கவனம் ஈர்த்துள்ளது தேவ்தத் பட்டாநாயக் எழுதிய 100 Reflections on the Harappan Civilization - AHIMSA நூல்.

சிந்துவெளி தொடர்பான 100 தலைப்புகளில், ஒரு பக்கம் ஓவியம் மறுபக்கம் அதனைப் பற்றிய விளக்கம் என்ற வகையில், வாசிப்போர் கவனம் சிதறாத வகையில், மிக எளிமையாக அனைத்துத் தரப்பு மக்களும் வாசிக்கும் வகையில் உள்ளது என பாராட்டுப் பெற்றுள்ளது.

ஆங்கிலத்தில் படைக்கப்பட்டிருக்கும் இந்த நூல் வெகு விரைவில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவர வேண்டும். தமிழ் வரலாற்று ஆய்வாளர்களும் ஆர்வலர்களும் வாசிக்க வேண்டிய ஒரு நூல். ரூ.381 விலையுள்ள இந்த நூல் அமேசான் உள்ளிட்ட தளங்களில் கிடைக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்



செ.இராமச்சந்திரன்



### அண்ணன் கோ.சி.மணி வீட்டில் தளபதி!

**அ**ன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் முதலமைச்சர் தலைவர் தளபதியார் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு, முன்னாள் அமைச்சர் அண்ணன் கோ.சி.மணி அவர்களின் பிறந்தநாள் நிகழ்வில் பங்கேற்பதற்காக வருகை தந்திருந்தார். 1999-ஆம் ஆண்டு செப்டம்பர்-13 ஆம் தேதி அன்று ஆடுதுறையில் உள்ள அமைச்சர் வீட்டில் அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துவிட்டு தொண்டர்களோடு தொண்டராக அமர்ந்து எங்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். அப்போது ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராக இருந்த நானும் தளபதியுடன் இருக்கும் புகைப்படம் இது.

**- செ.இராமச்சந்திரன், திருவிடம்பூர், தஞ்சாவூர் வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### 14 வயதில் அரசியல் பாடம்!

1938-ஆம் ஆண்டு வாக்கில், சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவரான பட்டுக்கோட்டை அழகிரியின் பேச்சால் ஈர்க்கப்பட்டு தனது 14-வது வயதிலேயே அரசியலுக்குள் நுழைந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அவரது பள்ளியில் நீதிக்கட்சி முன்னோடி பனகல் அரசர் குறித்த புத்தகமும் அரசியல் அரிச்சுவடியாகி சுயமரியாதை இயக்கத்தை நோக்கி அவரை இழுத்து வந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

655

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131